www.padippakam.com

# புதிய நட்சத்திரங்கள்



## - A.S.C.E..S -

# கலைவிழா மலர் 97

**06.04.1997 மாலை 5 மணி**

**'AMORC' - 199 bis, rue Saint - Martin, 75003 Paris**

M°: Etienne Marcel

படிப்பகம்

www.padippakam.com

# ECONOMISEZ




JUS[illegible]OS
APP[illegible]A[illegible]
AVEC TELECARTE GNANAM




## 100 frs

| DESTINATION | DUREE D'APPEL |
|---|---|
| ALLEMAGNE | 50 Mn |
| ANGOLA | 13 Mn |
| ARABIE SAUDIE | 17 Mn |
| ARGEN[illegible]NE | 20 Mn |
| BANGL[illegible]DESH | 14 Mn |
| BELGIQ[illegible] | 40 Mn |
| BOLIVIE | 16 Mn |
| BURKINA FASO | 17 Mn |
| BURUNDI | 13 Mn |
| CAMBODG[illegible] | 12 Mn |
| CAMERO[illegible] | 15 Mn |
| CANADA | 62 Mn |
| REP.C.A[illegible]UE | 10 Mn |
| CONGO | 14 Mn |
| COTE D'I[illegible]RE | 18 Mn |
| CHILI | 21 Mn |
| CHINE | 17 Mn |
| COLOMB[illegible] | 23 Mn |
| CUBA | 15 Mn |
| DANEMA[illegible] | 41 Mn |
| EGYPTE | 16 Mn |
| ESPAGN[illegible] | 33 Mn |
| ETHIOPIE | 12 Mn |
| FINLANDE | 35 Mn |
| GABON | 15 Mn |
| GHANA | 17 Mn |

| DESTINATION | DUREE D'APPEL |
|---|---|
| HAITI | 17 Mn |
| HONG KONG | 33 Mn |
| INDE | 20 Mn |
| ISRAEL | 20 Mn |
| ITALIE | 35 Mn |
| JAPON | 36 Mn |
| LIBAN | 15 Mn |
| LUXEMBOURG | 35 Mn |
| MALI | 15 Mn |
| MAROC | 24 Mn |
| MAURICE | 13 Mn |
| MEXIQUE | 31 Mn |
| NORVEGE | 45 Mn |
| PAKISTAN | 16 Mn |
| PAYS - BAS | 40 Mn |
| PHILIPPINES | 18 Mn |
| POLOGNE | 25 Mn |
| PORTUGAL | 29 Mn |
| SENEGAL | 14 Mn |
| SINGAPOUR | 40 Mn |
| SRILANKA | 17 Mn |
| SUISSE | 45 Mn |
| THAILANDE | 16 Mn |
| TUNISE | 24 Mn |
| VENEZUELA | 27 Mn |
| ZAIRE | 18 Mn |

Des cabines téléphoniques sont à votre disposition dans notre centre de CALL BACK ainsi que télécartes CALL BACK à prix discount PROFITEZ - EN!!

## GNANAM CENTER COMMUNICATIONS

195, ru[illegible] Paris 75010 Paris
Tél[illegible]

M°: La Chapelle / Gare du Nord

படிப்பகம்

www.padippakam.com



# சில வார்த்தைகள் உங்களுடன்....



எமது பாடசாலையின் (A.S.C.E.S) ஏழாவது ஆண்டுவிழாவை முன்னிட்டு "புதிய நட்சத்திரங்கள்" மலர் மூலம் உங்களுடன் கைகுலுக்கிக் கொள்வதில் பேருவகை கொள்கின்றேன். பிரெஞ்சு, ஆங்கில, தமிழ் வகுப்புக்களிற்கு ஒரு சில மாணவர்களுடன் ஆரம்பித்த இக்கல்விக்கூடம், இன்று கணனி, கணக்கியல், நடனம், சங்கீதம், வயலின், மிருதங்கம், மேலைத்தேய இசைக்கருவிகளை இயக்கும் பயிற்சி வகுப்புக்களை நடாத்துமளவுக்கு பரிணமித்துள்ளது. புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களாகிய நாம், ஐரோப்பிய தேசமொன்றில் நிர்வாக ரீதியாக ஸ்தாபனத்தை நெறிப்படுத்துவதற்கு, சக அங்கத்தவர்களினதும், நண்பர்களினதும் ஆக்கபூர்வமான முயற்சியே காரணமாகும்.

எமது கல்விநிலையத்தில் 135 மாணவர்கள் பிரெஞ்சுவகுப்புக்களிலும், 45, 30 மாணவர்கள் முறையே கணனி, ஆங்கில வகுப்புக்களிலும் – நடன, இசை வகுப்புக்களில் 60 மாணவர்களும் கல்விபயின்று வருகின்றனர்.

1995 ஆண்டு வைகாசி மாதம் "நடைமுறை பிரெஞ்சு" எனும் நூலை வெளியிட்டோம். இந்நூலை இலங்கைத் தமிழர்கள் மட்டுமின்றி, இந்தியத்தமிழ் மாணவர்களும் மிகுந்த ஈடுபாட்டுடன் கற்றுவருகின்றனர். குறிப்பாக ADAP, AFTAM, Secours Catholique போன்ற கல்விக்கூடங்களில் பிரெஞ்சுமொழி கற்பிக்கும் பிரெஞ்சு ஆசிரியர்கள் "நடைமுறை பிரெஞ்சு" முன்னோடி நூலாக உபயோகிக்க, தமிழ்மாணவர்களுக்கு சிபார்சு செய்திருக்கின்றார்கள் என்பது எமது கல்விநிலையத்திற்கு பெருமைசேர்க்கும் விடயமாகும்.

கடந்த வருடம் கல்விநிலையத்தின் சார்பில் புகலிடத்தில் வதியும் தமிழ்பேசும் சகலமட்டத்தினரின் அறிவுத்தேடலை விரிவுபடுத்தும் முயற்சியாக "அரும்பு" எனும் இதழையும் பிரசுரித்தோம். 1996 ஆண்டு கார்த்திகை மாதம் கல்விநிலையத்தின் சார்பில் *"கேக்"* கண்காட்சியும், 1997 ஆண்டு தைமாதம் *"கம்பியூட்டர் கண்காட்சி 'EXPO-97'"* யும் முதன்முதலாக பாரிஸ் தமிழ் மாணவர்கள் மட்டத்தில் நடாத்தப்பட்ட கண்காட்சிகளாகும்.

எமது கல்விக்கழகம் அறுகுபோல் வேர் பரவ, தங்கள் சேவையை அர்ப்பணிக்கும் சக ஆசிரியர்கள் திரு. சுப்பிரமணியகுரு சபேஸ்ஐயர் (ஆங்கிலம்), திரு. கிறிஸ்தோபர் பெர்னாண்டோ (கம்பியூட்டர்), திரு. K. ஜெகன் (கணிதம், இரசாயனம், பௌதீகம்), திரு. கனகலிங்கம் (மிருதங்கம்), திரு. துசியந்தன் (keyboard), திருமதி கௌசல்யா தர்மகுலசிங்கம் (நடனம்), திருமதி வசந்தி பிரகலாதன் (பிரெஞ்சு), செல்வி சுபாஜினி நடராஜா (தமிழ்), செல்வி வாசுகி சிவகடாட்சம் (கேக் அலங்காரம்), திருமதி கோமளா கந்தையா (வயலின்), திருமதி லீலா சண்முகதாசன் (சங்கீதம்), திருமதி மேரி (தையல்) ஆகியோருக்கு தலைவணங்குகின்றோம்.

மேலும் பாரிஸ் வடக்குப் பகுதியில் இருந்துவரும் மாணவர்களின் போக்குவரத்து வசதிகருதி பாரதி நுண்கலைக்கல்லூரி 6 rue Esclagon 75018 Paris இல் நடைபெறுகின்றது. இங்கு தற்போது தமிழ், பிரெஞ்சு வகுப்புக்கள் நடைபெறுகின்றன. வேலை செய்பவர்களின் நலன்கருதி திங்கள் மாலை 5 மணிக்கு 127 rue Marcadet 75018 Paris இல் பிரெஞ்சு வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

இம்மலரை சிறப்பாக வெளிக்கொணர தங்கள் விளம்பரங்களை மனமுவந்துதந்த வியாபார நிறுவனத்தினருக்கும், என்றென்றும் இன்முகத்துடன் கல்விநிலையம் வளர உறுதுணையாகவிருக்கும் பழைய மாணவர்களுக்கும் குறிப்பாக மாணவர் தலைவி திருமதி ரஞ்சிகுமாருக்கும், இவ்விதழை குறுகியகாலத்தில் கணனியில் பதித்து, வடிவமைத்து தந்த எமது நண்பர் திரு. பொ. இரவிச்சந்திரனுக்கும், அச்சமைத்து தந்த திரு. ஸ்ரீதரனுக்கும் (பாரதி அச்சகம்) நன்றிகள் பல.

தே. பிரகலாதன்
ASCES சார்பாக



படிப்பகம்

www.padippakam.com



# கணனி ஊடாக....

Fernando Christopher
(கணனி ஆசிரியர்)

எம் தமிழின கல்வி வளர்ச்சிக்காய் இயங்கி வரும் இவ் ஸ்தாபனம், இல்லை ஒரு கலை எனச் சொல்லாதளவுக்கு, பல கலைகளயும் கற்பித்து வருகின்றது. இதன் வளர்ச்சி ஒரு பல்கலைக் கழகத்தின் உயர்ச்சியை அடைய, ஏழாம் ஆண்டு நிறைவுமலர் மூலம், நெஞ்சுநிறை வாழ்த்துக்களை கொஞ்சுதமிழ் சேர்த்தெடுத்து, தமிழர் சார்பாக உதிர்க்கின்றேன். பிரான்சில் நாம் இந்நாட்டு மொழியை அறிந்திலோம் என்றால், ஊமையாக பிறந்திருக்கலாம் என தோன்றும். செந்தமிழ் வாய்திறந்து பிரான்சிய மொழியை பேசிட துணை செய்யும் இந்நிலையம் வாழி. இவ்விருபதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் வாழ்வோர் ஓர்சிறிதளவேனும் கணனி அறிவு கொண்டிலர் எனின் அது வெட்கத்துக்குரியதாமே. ஏனைய இனத்தாருடன் சரிநிகர் நிற்கும்வகையில் கணனி அறிவூட்டும் இந்நிலையம் வாழி. மேலும் பல கலைகளை கற்பித்து கலைக்கோயிலாய் விளங்கிடும் ASCES வாழியவே !

எம் கல்லூரியில் கணனி பணியை விளக்கிட விழைகின்றேன். கணனி அறிவு பூச்சியமாய் வருவோருக்கு மிக அடிப்படை விடயங்களிலிருந்து கற்பிக்கப்படுகிறது. மொழி ஒரு தடைக்கல்லாய் அமையாத வண்ணம் தமிழ் மொழியில் விளக்கம் தரப்பட்டு ஆங்கில மொழி, பிரான்சிய மொழி ஆகியவற்றில் குறிப்புகள் கொடுக்கப்படுகின்றன. DOS, WINDOWS, WINDOWS 95, WORD, EXCEL, ACCESS, DBASE, QBASIC, VISUAL BASIC, C ஆகிய பாடங்கள் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இன்னும் MODEM, SCANNER, VIDEO CARD, SOUND CARD, GRAVEUR, போன்ற சாதனங்கள் கணனியுடன் தொடர்பு கொண்டிருக்கும் விதம் விளக்கப்படுகிறது. கணனியின் பகுதிகள் புதிதாக கடையில் வாங்கப்பட்டு பொருத்தப்படும் விதம் (ASSEMBLE) காட்டப்படுகிறது. கணனிகள் இயங்காமல் இருக்கும் நிலை விளக்கப்பட்டு, அதன் திருத்தங்கள் கற்பிக்கப்படுகின்றன. கணனி பாவனையாளர் தாமே தமது கணனியில் மேலதிக பகுதிகளை இணைக்கக்கூடிய தன்மை பெறும் நிலை உருவாக்கப்படுகிறது.

கணனி கற்று கலையகத்திலிருந்து விலகிய மாணவர்களையும், தற்போது பயிலும் மாணவர்களையும் சேர்த்து ASCES PCC எனும் சங்கம் ஒன்று இயங்கி வருகின்றது. இதன் உயர்நோக்கங்கள் -- கணனி பாவனையாளர் யாவரும் கணனியில் தாம் பயன்படுத்தக்கூடிய program களைப்பற்றி அறிந்து கொள்தல் , கணனி பற்றி அறியாதோர்க்கு அதன் அடிப்படைத் தேவைகளை விளக்குதல், கணனி கற்றோர்க்கு மேலதிக விபரங்களை தெரிவித்தல் ஆகியனவாகும் . இதன் ஒரு பிரதிபலிப்பே ASCES PCC இனால் இவ்வாண்டு தை மாதம் 18ம்,19ம் திகதிகளில் 41 rue Didot, 75014 Paris இல் நடாத்தப்பட்ட EXPO '97 கணனி கண்காட்சியாகும். தமிழ் மக்கள் மத்தியில் கணனி சஞ்சிகை ஒன்று உலாவ வேண்டும் எனும் எண்ணங்கள் தோற்றுவிக்கப்பட்டு அதற்கான ஆக்கங்கள் படைக்கப்பட்டு வருகின்றன. பற்பல புத்தகங்களை வாசிப்பதாலேயே சந்தேகங்களை நிவர்த்தி செய்வதுடன் புதுப்படைப்புகளைப் பற்றி அறியலாம். இதற்காக மாணவர்களிடையே நூல்கள் பரிமாற்றம் செய்ய வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. கணனி பாவனையாளர்க்கு printer, modem, scanner ஆகியவற்றை, அவர்களின் பாவனைக்காக கொடுத்துதவும் தன்னலமற்ற சேவை இதன் சிறப்பம்சமாகும். கணனிகள் வாங்க , விற்க உதவுவது எம் சிறந்த பணிகளில் ஒன்று. கணனிகளை திருத்த program பண்ண ஆவன செய்தல் எமது சேவைகளை மேம்படுத்துகின்றன.

வாசகர்களில் கணனி பயின்றோர்க்காக சில தகவல்களை வரைகின்றேன். Windows 95 என்பது 95ம் ஆண்டு புரட்டாதி மாதம் வெளியிடப்பட்ட ஒரு Operating System (Système d'exploitation) என்பது யாவரும் அறிந்ததே. இது DOS, WINDOWS 3.1 போன்ற முன்னைய Operating System களிலிருந்து மிகவும் வேறுபட்ட திறமானதொன்றென்பது தெளிவு. அதில் ஒரு சிறப்பை இங்கு விளக்குவோம்.

One of the many advantages to Windows 95 is its greatly increased support for Local Area Networks (LAN). It also uses built-in networking components that are designed to work with Novell NetWare, Windows NT, and Microsoft LAN Manager networks. The networking components in Windows 95 are designed into the software as virtual device drivers operating in protected mode, so they don't use any conventional memory. Those who my be on the verge of implementing a LAN should realise that Windows 95 not only integrates with NetWare and Windows NT as a network client, but that it also has its own pere-to-pere networking built in.

*இன்றைய கால கட்டத்தில் கணனிகள் விற்க கற்பிக்க விளம்பரத்திற்காக பாவிக்க படும் பதம் INTERNET*




படிப்பகம்

www.padippakam.com




computer readable data shipped over a phone line or cable.

•••••



# EXPO' 97

– எம்.எஸ். ஸ்ராலின் –



**"Expo'97"** எனும் பெயரில் கடந்த மாசிமாதம் 18ம்,19ம் திகதி ஆகிய இருநாட்களிலும் ASCES பாடசாலை சார்பில் நடாத்தப்பட்ட கம்பியூட்டர் கண்காட்சியானது புலம்பெயர் தமிழர் வரலாற்றிலேயே ஓர் முக்கிய நிகழ்வாகும். எங்கள் நாட்டில் கல்குலேட்டரைக்கூட கண்காட்சியாகப் பார்த்த நாம் இன்று நவீன உலகில், நாகரீக நகராம் பாரீஸ் மாநகரில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எமது வாழ்வின் ஒவ்வொரு அசைவினிலும் கம்பியூட்ட ரானது அத்தியாவசியமாகி விட்டகாலமிது. இவ்வாறாக நாம் ஒவ்வொருவரும் முதற்படியாக கம்பியூட்டர் பற்றிய குறைந்தபட்ச அறிவையாவது தெரிந்து கொள்ள வேண்டும் எனும் உயர்நோக்கோடு இக்கண்காட்சி நடாத்தப்பட்டது.

எமது சமூகமானது பிறந்த மண்ணிலிருந்து பிடுங்கியெறியப்பட்ட மரங்களாய் அங்கொன்று மிங்கொன்றுமாய் உலகமெங்கும் மெதுவாக மீண்டும் வேர்விடும் காலமிது. இம்மண்ணில் ஒட்டியும், ஒட்டாமலும் விரும்பியோ, விரும் பாமலே நாம் நாட்களை கடத்திக்கொண்டு வெறும் தோட்டிகளாய் வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருக்கின்றோம். ஆனாலும் எமது புதியசந்ததி, இந்நாட்டில் பிறந்து வளர்ந்து வாழ ஆரம்பித்து கொண்டிருக்கின்றது. அதேவேளை அவர்கட்கும் எமக்குமிடையேயான இடைவெளி அதிகரித்துக்கொண்டு செல்வதை அவதானிக்க முடிகின்றது.

எதிர்கால எமது சந்ததியை வழிநடத்தும் வண்ணம், நாம் அவர்களுக்கு முன்னோடிகளாக இருத்தல் அவசியமானதொன்றாகும். ஏற்கனவே இந்நாட்டு தொடர்பாடல் மொழிவிடயத்தில் நாம் எமது சந்ததியினருக்கு முன்னோடியாயிருக்க முடியாதென்பதை அவர்கள் உணரத்தலைப்பட்டு விட்டனர். அடுத்தது அவர்களின் கல்வியறிவூட்டலிலாவது நாம் எப்படி எமது பங்களிப்பைச் செலுத்தப்போகின்றோம் என்ற வினாவிற்கு விடைதேடும்போது, நாமும் இந்நாட்டின் தொழில்நுட்ப விஞ்ஞான விடயங்களில் குறைந்தபட்ச அறிவையாவது பெற்றிருத்தல் அவசியமாகின்றது. இதையிட்டு எம்மிடையே வெளிப்பட்டுள்ள ஒவ்வொரு சங்கங்களும், ஸ்தாபனங்களும், பத்திரிகைகளும், சஞ்சிகைகளும், வானொலிகளும் மற்றும் சமூகநல விரும்பிகளும் இதுபோன்ற அறிவியல் தேடல்களில் எம்சமூகத்தை ஈடுபடுத்த வேண்டியது அவசியமானதும், அவசரமானதும் கூட.

இதற்கு கட்டியம் கூறுவதுபோன்றுதான் "Expo'97" கம்பியூட்டர் கண்காட்சியானது நடாத்தி முடிக்கப்பட்டிருக்கின்றது. அக்கண்காட்சி மண்டபத்திற்குள் நுழைந்தவுடன் என்போன்றவர்கட்கு கம்பியூட்டர் என்ற அந்த சொல் மீதிருந்த மாபெரும் பிரமை அறவே அற்றுப்போய்விட்டது. நண்டை உடைப்பதுபோன்று அக்குவேறு ஆணிவேறு என்பார்களே அதுபோன்று பாகம் பாகமாக வகைப்படுத்தி இலகுவான விளக்கங்கள் கொடுக்கப்பட்டன.

1. Assemble 2. Modem 3. Scanner 4. Video Card 5. Sound Card

என்று முக்கியபகுதிகளின் தொழிற்பாடு விளக்கப்பட்டது. இப்படியானதொரு நற்போக்குமிகு செயற்பாடுகள் நம்மிடையே மிகமிக குறைவே. அத்திபூத்தாற்போல் நடக்கும் இக்கண்காட்சி போன்ற நிகழ்வுகளை பயன்படுத்திக் காள்ள ஏன் எம் தமிழர்கூட்டம் தயங்குகின்றதோ தெரியவில்லை. ஏன் எத்தனை பிரமுகர்கள் எத்தனை சமூகசேவை ாளர்கள் இந்நிகழ்வைப் பார்த்தனர். பலரையும் பார்க்கத்தூண்டினர் என்றால் விடை மகிழ்ச்சிக்குரியதல்ல. *சோதிட பலனுக்கும், சோரம்போன சினிமாவிற்கும் ஒதுக்கும் பக்கங்கள் குறைந்துவிடும்* என்பதாலோ என்னவோ இந்நிகழ்வின் பின்னாவது இதுபற்றிய ஓர் பதிவையேனும் பத்திரிகையாளர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள்! சமூகத்தின்பால் அக்கறையுடையவர்கள்! சமூகத்திற்கு தந்ததாக தெரியவில்லை என்பது எம் சமூகத்தினூடு புதைந்துவிட்ட ஓர் சோகமான உண்மையாகும். இறுதியாக ஓர் வார்த்தை, இது போன்ற புதியதேடல்களில் தொடர்ந்தும் ஈடுபட திரு. கிறிஸ்தோபர் போன்ற விடய மறிந்தவர்களையும், ASCES போன்ற “சமூக” நிறுவனங்களையும் மனமார வாழ்த்தி வரவேற்போமாக. *புலம்பெயர் மண்ணில் புறநானூறு பேசுவதைவிட புதியனவற்றை அறிய முயலுதல் புத்திசாதுரியமாகாதா என்ன???*



படிப்பகம்

www.padippakam.com



# இசையின் பெருமை

உயர்ந்த சங்கீதம் எழுப்பும் ஆழ்ந்த பெருமூச்சுக்களை எழுத்தினால் ஏற்படுத்திவிட முடியாது. நிகழ்கலைகள் பல இருப்பினும் அவற்றுள் தலைசிறந்தது இசைக்கலைதான். இசையின் தாக்கமில்லையேல் நமக்கு வாழ்க்கையில்லை எனும் அளவிற்கு நமது கலாச்சாரத்துடன் பின்னிக்கிடப்பது இசை. மனிதர்கள் வாழும் இடம் எல்லாம் சங்கீதம் வாழ்கின்றது. எல்லா இன்பங்களுக்கும் மேலான இன்பத்தை இந்த இசை தருவதனால் தான் இசையும் இசைக்கலைஞர்களும் சகல மக்களாலும் மதித்து கௌரவிக்கப்படுகின்றார்கள்.

கீதம், வாத்தியம், நிருத்தம் மூன்றும் சேர்ந்ததுதான் சங்கீதம் என்பது. இது சுருதியையும், லயத்தையும் அடிப்படையாகக் கொண்டது. கடவுள் வேண்டிப்பாடுவதால் கீதத்தை முதலாவதாகவும், சுரதியை அடிப்படையாகக் கொண்டது வாத்தியம். பாடல் சுருதியுடன் இணைந்தே இருப்பதால் வாத்தியம் இரண்டாவதாகவும், மூன்றாவதாக அழைக்கப்படும் நிருத்தம் என்பது நர்த்தனம் என்பதாகும். இது ஆடிக்கொண்டே பாடுவதாகும். உயிருள்ள ஜீவன் ஒவ்வொன்றின் உடலிலும் சுருதியும் லயமும் இணைந்திருக்கும். சுருதி என்பது ஒலியாகும்- லயம் என்பது காலப்பிரமாணமாகும். சிவனுடைய ஐந்து முகங்களிலிருந்து வெளியான பேச்சின் ஒலிகளின் ஏழுவிதமான ஏற்றத்தாழ்வுகள் தான் ஸப்த (7) ஸ்வரங்களோடு கூடிய வேதங்கள் என்று கருதப்படுகின்றது.

சங்கீதம் நான்கு வகைப்படும். அவையாவன மார்க்க சங்கீதம், சுத்த சங்கீதம், தேசிய சங்கீதம், ஸாலக சங்கீதம் என்பவையாகும். ஸப்த ஸ்வரங்களுடன் கூடிய வேதங்கள் மார்க்க சங்கீதம். ஆரோகண அவரோகண கட்டுப்பாட்டுடன் கூடிய சம்பிரதாய சுத்ததுடன் பாடுவது சுத்த சங்கீதம். பல தேசத்து சங்கீதங்களின் சிறந்த அம்சங்களை நமது சங்கீதத்தில் இணைத்துப் பாடுவது தேசிய சங்கீதம், முறையில்லாமல் விருப்பம்போல் தோன்றியபடி பாடுவது ஸாலக சங்கீதம் என பிரிக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கையில் சுகமும், துக்கமும் மாறிமாறி வருவது இயற்கை. இதற்கு அப்பாற்பட்ட தெய்வீக நிலையை இசையின் மூலம் மனிதன் பெறுகின்றான். அதனால்தான் பக்தர்கள் கூடிப்பாடும் போதும் இனிமையான இசைக்கச்சேரி நடைபெறும் போதும் மக்கள் ஆனந்த நிலையில் இருப்பதைக் காண்கின்றோம். சுகமான சங்கீதம் கேட்கும்போது தன்னையும் உலகையும் மனிதன் மறந்து போகின்றான். ஆண்டவன் புகழை அனுபவித்துப்பாடும் போது ஒவ்வொருமுறையும் பலமுறை கடவுள் வழிபட்டவர்கள் போல் ஆவார். உண்மையான சங்கீதம் கற்பதற்கு கஷ்டமாக இருப்பினும் தேர்ச்சி காணும்போது அதனால் கிடைக்கும் பேரின்பத்திற்கும் பெருமைக்கும் எல்லை இல்லை எனலாம்.

ஸ்வர சுத்ததுடன் சில இராகங்களைப்பாடும் போதும் வாத்தியங்களில் வாசிக்கும்போதும் நோய்கள் குணமாவதாகவும், பயிர்கள் நல்ல ஊட்டத்துடன் வளர்கின்றதென்றும் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். கொடிய விஷத்துடன் கூடிய பாம்புமுதல் சகல ஜீவராசிகளும் சங்கீதத்திற்கு வசமாகின்றன. நல்லவைகள் நேரும்பொழுது சந்தோஷமும், கஷ்டங்கள் நேரும்போது துயரமும் மாறிவருவது இயல்பு. இதை சமப்படுத்தி நிம்மதியை தருவது சங்கீதம் ஒன்றுதான்.

இசைபாடும் இடமெங்கும் தான் இருப்பதாக பரமாத்மா கூறுகின்றன. யாருக்கு சுத்த ஸ்வர சங்கீதத்தை அனுபவிக்க தெரியவில்லையோ அவனுக்கு மோட்சமேயில்லை என்று ஸ்ரீதியாகராஜ சுவாமிகள் தனது பாடலில் கூறியுள்ளார்.

இத்தனை பெருமைவாய்ந்த காலத்தில் அழியாத இசைக்கலையை வளரும் சமுதாயத்தவர்கள் ஒவ்வொருவரும் கற்கும் மனநிலை வரப்பெற்று அதில் தேர்ச்சியடைந்து மென்மேலும் வளர்ச்சிபெற்று சிறப்புற்று வளர உதவுவார்களாக!

◈◈◈◈◈

– **கோமளா கந்தையா** *(வயலின் ஆசிரியை)* –



படிப்பகம்

www.padippakam.com

தரமான தங்க நகைத் தேர்வுகளுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்

**MOHAN JEWELLERY MART**

201, RUE DU FG.ST DENIS
75010 PARIS
Mo: La Chapelle ou Gare du Nord

Tél. : 01 42 05 65 26
Fax: : 01 42 05 65 79

சுத்தம் - சுவை - தரம்
ஆடு, மாடு, கோழி இறைச்சி
வகைகளுக்கு நாடுங்கள்

**யாழினி சென்ரர்**

Boucherie Yalini

2 rue Perdonnet, 75010 Paris
Tél : 01 42 09 00 76
M° : La Chapelle / Gare du nord

நீங்கள் விரும்பிய
அறுசுவை உணவுகளுக்கு
அன்புடன் அழைக்கின்றது

23, rue Cail, 75010 Paris - Tél: 40 34 20 72
Mo: La Chapelle

மலிவு விலைக்கு மறுபெயர்

**MALA**

22 rue Labat 75018 Paris
Tél : 01 42 62 01 23

அனைத்துப்பொருட்களுக்கும்
மாலா! மாலா! மாலா! மாலா!

படிப்பகம்

www.padippakam.com



# சிறுவர்கல்வியும், புலம்பெயர்ந்த சிறுவர்கள் கல்வியில் எதிர்நோக்கக்கூடிய சில பிரச்சனைகளும்...

- சி. சுரேஸ்

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" இந்தவகையில் ஆரம்பக்கல்வியானது மிகவும் அவதானத்துடன் புகட்டப்பட வேண்டியதொன்றாகின்றது. பிள்ளைகளின் பிஞ்சு உள்ளங்கள் எழுதப்படாத சிலேற் அல்லது, வெள்ளைக்கடதாசிக்கு ஒப்பிடப்படுகின்றது. எடுத்த எடுப்பிலேயே சரியாகவும், அழகாகவும், மாற்றமற்றதாயும் எழுதவேண்டும். அப்படியில்லாதவிடத்து, அது அழித்து எழுதப்படும்போது கீறல்கள் விழுந்து தெளிவற்றதாயும், அழகற்றதாயும் காணப்படும். இதேபோலத்தான் பிள்ளைகள் மத்தியில் கல்விபோதிக்கும்போது நாம் மிகஅவதானமாக இருக்கவேண்டும். நாம் வீட்டிலிருந்து அவர்களுடன் பாவிக்கும் வார்த்தைகள், நடைமுறைப் பழக்கவழக்கம், கல்விமுறை என்பன இதில் அடங்கும். இவை சரியாக கையாளப்படாதவிடத்து பிள்ளைகள் மனதில் குழப்பத்தையும், தாக்கத்தையும் அது உண்டுபண்ணும்.

ஆகவே இதுவிடயத்தில் பெற்றோர், ஆசிரியரின் வழிநடத்தல் இன்றியமையாத தொன்றாகின்றது. பிள்ளைகளைப் பொறுத்து அவர்களின் கல்வியானது வீட்டிலே, அதாவது தொட்டிலிலோ ஆரம்பிக்கின்றது என்று கூறலாம். பெற்றோர்கள் பிரயோகிக்கும் வார்த்தைகள், நடைமுறைப்பழக்க வழக்கங்கள், பிள்ளை நாளாந்தம் நித்திரையால் எழுவதிலிருந்து நித்திரைக்குச் செல்லும்வரை ஈடுபடும் பழக்கவழக்கங்களும் கல்விதான். இதுதான் நடைமுறைக்கல்வி.

பெற்றோர்தான் முதல் ஆசிரியர்கள். 1வது தாயும், 2வது தந்தையும், 3வது குருவும் மாணவர்களை ஒழுக்கசீலர்கள், நற்பண்புடையவர்களாக வழிநடத்த வேண்டியவர்கள். மாதா, பிதா, குருவை தெய்வம் என்று குறிப்பிடுவது இதனால்தான். வீட்டுக்கல்வி தாலாட்டு, மழலைச்சொற்கள் உடன் ஆரம்பிக்கிறது. குழந்தை ஆரம்பத்தில் அதாவது பிறந்ததிலிருந்து பெற்றோரின் பேச்சைக் கேட்கின்றது. பின்னர் வளர வளர அதைப்பின்பற்றி தானும் அதைத்திரும்பச் சொல்லி அதனைப்பேச முற்படுகின்றது. இதேபோலத்தான் சிறிது வளர்ந்தாலும் பெற்றோரின் நடைமுறைப் பழக்கவழக்கம், செய்கைககளை தானும் பார்த்து பின்பற்றுகின்றது. இங்குதான் பெற்றோரின் பங்களிப்பு மிக மிக அவசியம் (இந்த நடைமுறையைப்பின்னர் மாற்றமுற்படும் போதுதான் கீறல்விழ ஆரம்பிக்கின்றது.)

அடுத்து குருவினால் போதிக்கப்படும் கல்வி. இது உலகின் நடைமுறை! இதனை ஓரளவு புத்தகக்கல்வி எனலாம். நாட்டிற்கு நாடு, இடத்திற்கிடம் ஒப்பிட்டு பார்க்கும் போது அடிப்படைக்கல்வி மாறாத போதும், அணுகுமுறையில் மாற்றத்தைக் காணலாம். எமது நாட்டில் குரு கற்பித்தல் தொழிலைச்செய்யும் ஆசிரியராக மட்டுமல்லாமல் நடைமுறை ஆசானாக, அதாவது நடைமுறை, பழக்கவழக்கம் செயல்கள், வார்த்தைகளில் மாணவர்கட்டு வழிகாட்டும் உதாரண புருஷராக திகழ்கின்றார். இதனால் 'குரு தேவஜயதே' என்பதுபோல குரு தெய்வமாக மதிக்கப்படுகின்றார். ஆனால் இந்நாட்டு சூழ்நிலைகள் அவ்வாறாக இல்லை. ஆசிரியர் பாடசாலையில் குருவாக இருப்பதற்கும் அவரது நடைமுறை வாழ்விற்கும் தொடர்பு கிடையாது. மாணவர்கள் ஆசிரியரை 'விழித்தல்' (அழைப்பதிலிருந்து) எல்லாமே மாறுபட்டபோக்கை உடையன.

பாடசாலைப்பருவம் மாணவர்கட்கு மிகமுக்கியம். உலகை அறிதல், சமுதாயத்தை அறிதல், சமுதாயத்தில் பிரவேசித்தல், வெவ்வேறு வகையானவர்களுடன் பழகுதல், தன்னை அறிதல், சரி-பிழை அறிதல், கேள்விகேட்டல் சிந்தித்தல், செயலாற்றல், தானாக முடிவெடுக்க முற்படுதல் ஆகியன இப்பருவத்தில் தான் நடைபெறுகின்றன. ஆகையால் அணுகுமுறை மிகமிக கவனத்திற்குரிய தொன்றாகின்றது. இந்நாட்டில் நடைமுறைக்கல்வியானது செயற்திறனான பொறிகளையும் அதன் நுட்பங்களையும் பிள்ளைகளை சிறுவயதிலிருந்தே கையாளவிடுதல், பல்வேறு உபகரணங்களைப் பயன்படுத்தி நடைமுறை-செயல்முறைகள் கற்பிக்கப்படுவதுடன்; காட்சிகள், சூழல் சுற்றுலாக்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். மற்றும் ஆசிரியர்கள் தகுந்தாற்போல் பயிற்றுவிக்கப்பட்டு பாடசாலை நேரத்தில் முழுஊக்கம், முழுவசதிகளுடன் கல்வி புகட்டக்கூடிய வாய்ப்பினைப் பெற்றுள்ளார்கள்.

அடுத்து பாடசாலைக்கல்வியால் மாணவப்பருவத்திலும் பெற்றோரின் பங்களிப்பு வழிநடத்தலை நோக்கும்போதே சிறிது குழப்பங்கள் தோன்றுகின்றன. அதனை சொந்தநாட்டில் இருந்து வேற்றுநாட்டிற்கு வந்தபிள்ளைகட்கு ஏற்படக்கூடிய பொதுவான கல்வி அணுகுமுறையை முன்னர் பார்த்தோம். எனினும் வேற்றுமொழியறிவுடைய நம்மாணவர்கள் இந்நாட்டு மொழியூடாக கற்கும் நிலைகள் பெற்றோரின் குழப்பமான சூழ்நிலைகளினால் சிறிது பரிதாபத்திற்குரியவை ஆகின்றன. தாய்மொழி, ஆரம்பக்கல்விமொழி, பேச்சுமொழி ஒன்றாகவும்; பாடசாலையில் வேறொன்றாகவும் கற்பிக்கப்படுகின்றது. இதனால்



படிப்பகம்

www.padippakam.com



தமிழ்ப்பிள்ளைகள் வேறு தமிழ்ப் பிள்ளைகளுடன் பேசும்போது கலப்புமொழியைக் கையாளும் தன்மையை காணமுடிகின்றது. இதை பெற்றோர் ஒழுங்காக வழிநடத்தமுடியாது திணறும்நிலை காணப்படுகின்றது. மேலும் பிள்ளைகளின் கல்விமுறை, கலாச்சார பண்பாடுகள், வீட்டுச்சூழ்நிலையுடன் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன.

இந்நாடுகளிலுள்ள செய்முறை உதாரணக் காட்சிக்கல்வி, சூழல்கல்வியும் முழுவதும் மாறுபட்ட காணப்படுவதால் பெற்றோர் பிள்ளைகளுக்கு பாடசாலைக் கல்வியில் முழுஅளவில் உதவி செய்யமுடியாதநிலையில் உள்ளனர். முன்னர் குறிப்பிட்டது போன்று பிள்ளைதொட்டிலிலிருந்தே பெற்றோரின் பேச்சைக்கேட்டு பின்னர் பேச ஆரம்பிக்கின்றது. எமது பிள்ளைகள் கல்விமொழியை பாடசாலைக்குச் செல்ல ஆரம்பித்ததன் பின்னரே தெளிவாக கேட்க, பேச ஆரம்பிக்கின்றனர். இவை மற்றப்பிள்ளைகளுக்கும் எமது பிள்ளைகளுக்கும் ஓர் இடைவெளியை தோற்றுவிக்கின்றது. ஆயினும், நாம் பாடசாலைக்கு செல்லமுன்னரே அம்மொழியைக் கையாள முற்பட்டால் அது கிறுக்கப்பட்ட கீறுவிழுந்த எழுதி அழிக்கப்பட்ட சிலேற் அல்லது வெள்ளைத்தாளின் நிலைக்கு தள்ளப்படுகின்றது. ஏனெனில் சிறுபிராயத்தில்தான் காது ஒலிகளை தெளிவாகவும், நுண்மையாகவும், வன்மை-மென்மையாக கேட்கக்கூடியதன்மை உடையதாகவும், மூளை இவற்றை நன்றாக பிரித்து, பகுத்து, பதிந்து வைக்கக்கூடியதாகவும் (புதிய வெள்ளைத்தாள்போல்) தேவை ஏற்படும் போது இவற்றை நாக்கு சிறப்பாக உச்சரிக்கக்கூடியதன்மையையும் உடையனவாக இருக்கின்றது. ஆனால் பெற்றோர் சிறுபிராயத்தில் இம்மொழியைக் கற்காததினால் இத்தன்மை அற்றோராக உள்ளனர்.

*"ஓடி விளையாடு பாப்பா...*
*கூடி விளையாடு பாப்பா....."*

இது எமது செயல்முறை கல்விமுறை. எம்மைப்பொறுத்து இது பாரதியின் குழந்தைகளுக்கான பாட்டு, சற்று ஆழமாக பார்த்தால் தமிழ் இலக்கண இலக்கிய நடைமுறைப்படி குழந்தைகட்கு புரியக்கூடிய அவர்களை மகிழ்விக்கக்கூடிய எளிய நடைமுறையிலான பாட்டு. உளவியல் கண்ணோட்டத்துடன் சற்று உற்றுநோக்கினால் இது உளவியல் தத்துவம் நிறைந்ததாகும். உளவியலாளர் கூற்றுப்படி உடல், உளவிருத்திக்கு விளையாட்டு இன்றியமையாத தொன்றாகும். சகவயதினருடன் சூழலில் சேர்ந்தியங்கும் பண்பு, கூட்டு நடவடிக்கை இவை பிள்ளைகளின் அறிவு, சிந்தனாசக்தி தனித்து செயலாற்றுவதுடன் பண்பு பிரச்சனைகள் தம்மிடையே தீர்த்துக்கொள்ளல், பரஸ்பரபுரிந்துணர்வு, நல்லெண்ணத்தை வளர்ப்பது, கூட்டு நடவடிக்கை (விளையாட்டு) இன்றியமையாததாகும்.

இங்கு "ஓடிவிளையாட" இடவசதி, வீட்டுவசதி, முற்றவசதி தடைபோடுகின்றது. அயலில் உள்ள மாணவர்கள், சகவயதினருடன் கூடிவிளையாடுவதை அனுமதிக்கப் பெற்றோர் தயங்குகின்றனர். காரணம், இன கலாச்சார, பழக்கவழக்கங்கள், பாரம்பரிய நடைமுறைவேறுபாடு உட்பட பிள்ளைகளுக்கு விளையாட்டில் ஏதாவது ஏற்பட்டால் அதைத் தீர்த்து வைப்பதில் தங்களுக்கு ஏற்படக்கூடிய மொழிப்பிரச்சனை. இவை பிள்ளைகளின் மொழி (பேச்சு), உள, உடல், வளர்ச்சிக்கு பெரிதும் ஊறுவிளைவிக்கின்றன. மாறாக பூட்டப்பட்ட வீட்டில் தொலைக்காட்சி, படம் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் கருவிகள் பிள்ளைகளுக்கு கொடுப்பது மட்டுமல்ல, சகல செயற்பாட்டுகளிலும் பெற்றோர் உடனிருக்கும் பெரியவர்களின் தலையீடு செயல்படுகின்றது.

சில சிறுவர் மனோவியலாளரின் கூற்றுப்படி சிலவகையான காட்டுன்கள், விளையாட்டு கருவிகள் பிள்ளைகளின் உளமனோவளர்ச்சிக்கு ஊறுவிளைவிக்கும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன. அதாவது குத்துவெட்டு கொலை, துப்பாக்கிச்சூடு உட்பட சிலவாகனங்கள் அல்லது இயந்திரமனிதர்கள் மோதும் போது உடல்சிதறி அவயவங்கள் துண்டாடப்படக் குருதிசிந்துதல், இவை பிள்ளைகள் இடையேயும் தாமும் அவ்விதம் இருக்கவேண்டும் என்று சண்டை, குத்துவெட்டு போன்ற செயல்களில் ஈடுபட தூண்டுவித்து, நல்லெண்ணம் நட்புறவுக்குப் பதிலாக அவர்களிடையே மனவிகாரம், குரூர, கடினத்தன்மைகள் ஏற்பட்டு அவர்கள் பிற்காலத்தில் தயக்கமின்றி எவ்வித குற்றச்செயல்களையும் செய்வதற்கு பயப்படாத அளவுக்கு மனம்வேதனைப்படாத ஓர் வைராக்கியநிலைக்கு இட்டுச்செல்கின்றது. மேலும் ஒரு பத்திரிகையில் குறிப்பிட்டதன்படி மேலைநாட்டில் உள்ள வௌவால்மனிதன் *(Batman)* காட்டுனைப்பார்த்த ஒரு பிள்ளை தான் தன்னை வௌவால் மனிதனாக கற்பனைசெய்து தனக்கு இரண்டு செட்டைகளைக் கட்டிக்கொண்டு மாடியில் இருந்து ஏனையபிள்ளைகள் விளையாடிய விளையாட்டுத்திடல் நோக்கிப் பாய்ந்த போது இறந்ததாக குறிப்பிடுகின்றது.

ஆகவே பெற்றோர்கள் பிள்ளைகளை எமது இனம் என்ற கண்ணோட்டத்துடன் பாராமல் ஏனையபிள்ளைகளுடன் சேர்ந்து விளையாட, இயங்க விடுவதன் மூலம் அவர்களின் மொழி, உள, உடல் விருத்திக்கு உதவலாம். மேலும் பிள்ளைகட்குரிய விடயங்களில் பெற்றோர் ஆதாயம் தேடமுற்படாமல் பிள்ளைகட்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் இன்னும் அவர்களுக்காக சிறிது நேரத்தை ஒதுக்கி பூங்கா *(Park)*, நூல்நிலையம், ஏனைய பிள்ளைகளின் கல்விக்கு உதவக்கூடிய கல்விநிலையங்களுக்கு அழைத்துச்சென்று அவர்களின் கல்விமேம்பாட்டுக்கு உதவுதல் பெரிதும் நல்லது. எதிர்கால சந்ததிக்கு நாம் பட்ட இன்னல்களை தகர்த்தெறிந்து ஒளிமயமான பாதையைக்காட்டி வழிநடத்த முடியும். இவ்விடயத்தில் கல்விநிலையத்தின் பங்களிப்பு வழிகாட்டியாகவும், புலம்பெயர்ந்து வாழும் இருமொழி / இரு கலாச்சார பண்பை சந்தித்துள்ள பெற்றோரின் கடமை முக்கியத்துவம் பெறுகின்றது......... என்று கூறினால் அது மிகையாகாது.



படிப்பகம்

www.padippakam.com


லாச்சப்பலில்...

உங்களின் தேவைக்காக எங்களின் சேவையினை ஆரம்பித்துள்ளோம்

மளிகைப்பொருட்களின் மாளிகை

# நியூ சப்பல் ஸ்ரோர்ஸ்

உங்களுக்குத் தேவையான மளிகைப்பொருட்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே விரையுங்கள்

NEW CHAPELLE STORES

214 rue du Fbg.St. Denis 75010 Paris

Tél : 01 40 36 20 35 / Fax : 01 40 36 20 36

நீங்கள் விரும்பிய சுத்தமான, சுவையான, இலங்கை இந்திய அறுசுவை உணவு வகைகளை உண்டு மகிழ்ந்திட

# டிஸ்னி

ஓடருக்கு அனைத்துவிதமான உணவு – வகைகளையும் செய்து பெற்றுக் கொள்ளலாம்

DISNEY RESTAURANT
25 rue Cail
75010 Paris
Tél : 01 42 25 44 04
*M° Gare du Nord / La Chapelle*

# சக்தி

*La Chapelle / Gare du nord* இல்..

**சக்தி எம்போறியம்**
193 rue du Fbg. St. Denis 75010 Paris
Tél : 0142097824 / Fax : 0142097614

**சக்தி ஜீவல்லறி**
189 rue du Fbg. St. Denis 75010 Paris
Tél : 0140372637

**பொம்பே பெஷன்**
187 rue du Fbg. St. Denis 75010 Paris
Tél : 0142095664 / Fax : 0142097614

*Marcadet Poissonniers* இல்..

**சக்தி வீடியோ**
15-21 rue Labat 75018 Paris
Tél : 0142525301 / Fax : 0130734773


படிப்பகம்

www.padippakam.com

புதிய நட்சத்திரம் கண்டு சூரியனும் உவகை கொள்வான்

கடந்த ஏழு வருடகாலமாக எம்போன்ற விழுதுகளைத்
தாங்கி நிற்கும் ஆலமரமே தொடர்க உன்சேவை!

பழைய மாணவர்கள் சார்பாக
திருமதி ரஞ்சி–குமார்
மாணவர் தலைவி


**அருண் அன் சன்ஸ்**

ஆடவர், நங்கையர்,
சிறுவர், சிறுவர்களுக்கான
ஆடைத் தினுசுகளுக்கும்
மற்றும் ஓடியோ, சிடி,
வீடியோ
கசெட்டுக்களுக்கும்
நாடுங்கள்

**ARUN & SONS**
7 rue Perdonnet
75010 Paris
Tél : 01 42 05 36 19
M° La Chapelle / Gare du Nord



அறுசுவை உணவுகளை உடனுக்குடன் தயாரித்து
வழங்குபவர்கள்

**சாந்தினி உணவகம்**

திருமணம், பிறந்தநாள் கொண்டாட்டங்களுக்குத்
தேவையான சாப்பாட்டு வகைகளுக்கும் தொடர்பு
கொள்ளுங்கள்

50 சாப்பாட்டுக்கு மேல்

மரக்கறிச்சாப்பாடு (5 மரக்கறி, பப்படம், மிளகாய்,
பாயாசம்) – 16.00 பிராங்குகள்
பிரியாணி (ஆடு, மாடு, கோழி) – 19.00 பிராங்குகள்
பிறைட் றைஸ் – 20.00 பிராங்குகள்

**RESTAURANT SHANTHINI**
10 rue Labat 75018 Paris
Tél : 01 42 58 71 19
M° Marcadet Poissonniers


படிப்பகம்

www.padippakam.com



# ET வேற்றுலகவாசி

- யமுனா ராஜேந்திரன்

நாம் பூமியில் வாழ்கின்றோம், சாப்பிடுகின்றோம், பிஸ்கட் சாப்பிடுகின்றோம். நிறைய ஜுஸ் குடிக்கின்றோம். பட்டாம்பூச்சிகள், நத்தைகள், பூனைகள், நாய்க்குட்டிகள், மான் எல்லாமும் அச்சா. இவைகளை முத்தமும் கொடுக்கலாம்.

இதோ பூமி மாதிரிநிறைய கிரகங்கள். சூரியனைச் சுற்றி கிரகங்கள். அங்கேயும் பகலும் இரவும் வரும். என்றால் ஆட்களும் இருக்கலாம் தானே? நம்ம மாதிரியே விளையாடுவார்கள் தானே? பேசுவார்கள் தானே?

நமக்கு தமிழ் தெரியும். அப்பா, அம்மா சொல்லித்தருவாங்கள். பிரெஞ்சு தெரியுமா? பிரெஞ்சுக்குழந்தைகளோடு பேசமுடியுமா? பிரெஞ்சு படிச்சால் பேசலாம். வேறே உலகத்திலிருந்து வரும் கரடிக்குட்டி, இல்லையானால் குழந்தை பேசினால் நமக்கு விளங்குமா? விளங்காது. பழகப்பழக பேசப்பேச கையாட்டி கையாட்டிப் பேசலாம். அப்போ புரியும். நாய்க்கு கரடிக்கு பேசமுடியாது. பேர் வச்சு கூப்பிட்டால் சொன்னால் விளங்கும்.

ஒருநாள் அமெரிக்க நாட்டிலே ஒரு ஊரில் ஒரு ராத்திரியில் குட்டி ஜீவராசியொன்று வந்தது. அதுக்கு பேசத்தெரியாது.

மேல் லோகத்திலிருந்து வந்த ராக்கெட் மாதிரி வீட்டிலிருந்து தெரியாம தப்பிச்சு வந்திட்டுது. அதுக்கு மனிசரக்கண்டா பயம். பாவம் குட்டி. இரண்டு கண்ணு, நீட்டமா விரல், குட்டிக்கால், குட்டிக்கரடி மாதிரி இருக்கும். அதை ஒரு குட்டி அண்ணா பார்த்தான். குட்டிப்பாப்பா பார்த்தாள். பெரிய அண்ணா பார்த்தான்.

பிரெண்டு (நண்பர்கள்) ஆயிட்டினம்.
அதுக்கு பேர் வச்சினம். ET. ET என்றால் வேற உலகவாசி (*Extra Terrestrial*).

அது வந்தது அம்மாவுக்குத் தெரியாது. தெரிஞ்சா தொரத்திப்போடுவா என்று அண்ணாக்களும் பாப்பாவும் நெனச்சாங்கள்.

அவங்களுக்கு அந்தக்குட்டி ET விருப்பம்.
ET டிவி பார்க்கும், ஜுஸ் குடிக்கும், விளையாடும், குளப்படி செய்யும். முகமூடி போட்டுக் கொண்டு டேன்ஸ் ஆடும்.

ஒருநாள் அண்ணாக்களும் பாப்பாவும் குட்டியை கூட்டிக்கொண்டு வெளிய பார்க்குக்கு போனாங்கள். அங்கே குட்டி காணாமல் போச்சு. மேல் லோகம் போக நெனச்சுச்சு. முடியலை. எழுந்திருக்கவும் முடியலை. பாவம். குட்டி அண்ணாவுக்கு அழுகை அழுகையாக வந்தது. தங்கச்சியும் அழுகுறா. அண்ணாவும்அழுகுறா. அம்மாவுக்கும் தெரிஞ்சு போச்சு.
அப்ப இந்த ET வந்தது. டாக்டர் மாமாக்களுக்கும், ஸயின்ஸ் மாமாக்களுக்கும் தெரிஞ்சு போச்சு.



படிப்பகம்

www.padippakam.com



என்ன செஞ்சாங்கள்?

அவங்களுக்கு ET பார்க்க ஆசை. அதைக்கொண்டு பேசிப்பார்க்க ஆசை. அதை வச்சி மேல் லோகத்திலை யாரெல்லாம் இருக்குறாங்கன்னு தெரிய ஆசை.

அவங்க அண்ணா வீட்டுக்கு வந்தாங்கள். ET க்கு சுகமில்லை. முணங்குது. பேசமுடியவில்லை.
எல்லோரும் அழுகுறாங்க.
டாக்டர் மாமாங்க ஊசி போட்டாங்கா. என்னன்னமோ குழாயெல்லாம் மாட்டி வைத்தியம் செஞ்சாங்க.
அண்ணா சத்தமா அழுகுறான்.
ET மூச்சு பேச்சில்லாம கிடக்குது. அசையவே இல்லை. செத்துப்போச்சின்னு எல்லா டாக்டர் மாமாவும் போயிட்டாங்கா. அண்ணா மெல்ல போய் பார்த்தான். ET சிரிச்சது. சாகலே. ET அண்ணாவுக்கு வேணும்.

என்ன செஞ்சாங்க?

ET யை போத்தி அண்ணாமட்டும் மூஞ்சியை மூடி சைக்கிள்லே வச்சி ஓடிப்போனான். அவன் பிரன்ஸ் எல்லாம் குட்டி சைக்கிள்ல ஓடறான். குட்டிப்பாப்பாவும் ஓடறாள்.
டாக்டர் மாமா, ஸயின்ஸ் மாமா, போலீஸ் மாமா எல்லாம் துரத்திறா.
திடீரென்னு சைக்கிளெல்லாம் வானத்திலே பறக்குது. காட்டு மேலே பறக்குது. மலைமேலே பறக்குது? சூரியன் மேலே பறக்குது. நிலாமேலே பறக்குது.
ET தான் அப்படிச்செஞ்சது. அதுக்கு மந்திர சக்தி இருக்குது.
எல்லாரும் ஒரு காட்டுக்குப் போனாங்க. ET மேல் லோகம் போக வழி செஞ்சது. ராக்கெட் வீடு கீழே வந்து நின்றது.

ET எல்லோர்கிட்டையும் சொல்லிட்டு மேல் லோகம் போக வேணும்.
அங்கே ET க்கு அப்பா, அம்மா, அண்ணா, தங்கச்சி, மாமா எல்லோரும் இருப்பாங்கள்.
எல்லோரும் அழுறாங்கள். ET பாப்பாவை கட்டிப்பிடிச்சு அழுது. எல்லோருக்கும் முத்தம் குடுக்குது.

கடைசியிலே அண்ணா அழுகுறான். ET அண்ணா கண்ணைத் தொடச்சிவிட்டு முத்தம் குடுத்துட்டு மேலே ஏறி வானத்திலே மறஞ்சு போச்சு.
அண்ணா, அம்மா, குட்டிப்பாப்பா, டாக்டர் மாமா, ஸயின்ஸ் மாமா, போலீஸ் மாமா எல்லோரும் வானத்தைப்பார்த்துக் கொண்டு ET மறையற வரை நின்னாங்கள்.

ஸ்டீபன் ஸ்பில்பர்க் மாமா கொடுத்த படம் இது. ET என்றுபேர். நல்லபடம். ஆனா ET வெள்ளைக்கார அண்ணாக்கள் மட்டுந்தான் பார்க்க முடியுமா?
நாங்களும் பார்க்கலாம்.
ஆப்ரிக்க அண்ணாக்களும், அரபு பாப்பாக்களும் பார்க்கலாம்.
*ET நம்ம ஊருக்கும் - நம்ம நாட்டுக்கும் - நம்ம வீட்டுக்கும் கட்டாயம் வரத்தானே வேணும்?*

## *ஐநூறு பிராங் பிரெஞ்சு நாணயத்தில்...*

போலந்து நாட்டில் பிறந்து உயர்கல்விக்காக பிரெஞ்சுநாடு வந்து 1903 பௌதீகத்திற்கான நோபல்பரிசைப் பெற்றவரான மேரி கியூரி ***(Marie Curie)*** இவரது கணவர் ***Pierre Curie*** 1911 இல் இரசாயனத்திற்கான நோபல்பரிசையும், இவர்களது மகள் ***Irène Joliot*** 1935 இல் இரசாயனத்திற்கான நோபல்பரிசைப் பெற்ற சிறப்புக்குரியவர்கள்.

பாரிசில் உள்ள **Panthéon** என்ற பழம்பெரும் ஆலயத்தில் சிறந்த பிரெஞ்சுக்குடிமகன்களாய் கருதப்பட்ட கவிஞர்கள், விஞ்ஞானிகள், அரசியல்வாதிகளின் சடலங்களை அடக்கம் செய்யப்பட்டுவந்தது. 1995 இல் முதல் தடவையாக ஒருபெண்மணியின் பூதவுடல் மறுஅடக்கம் செய்யப்பட்டது. இந்தப் பெருமைக்குரியவர் ***Marie Curie*** அம்மையார் ஆவார். 1995இல் வெளியான 500 பிராங்கு நாணயத்தில் கியூரி தம்பதிகளின் படமே அச்சிடப்பட்டுள்ளது.

*- வசந்தி பிரகலாதன் -*



படிப்பகம்

www.padippakam.com



# மனத்தின் ஆற்றல்

~ வன்னி இசித்தோர் ~

உலகத்தின் சீவராசிகளில் மிகவும் அபூர்வமாக படைக்கப்பட்டவன் மனிதன். ஆம் '*விவிலியம்*' என்ற நூலில் இறைவன் உயிரினங்களைப் படைத்தபோது, தன்னுடைய சாயலாக மனிதனைப் படைத்தான் என்று கூறும்போது மனிதனுடைய முக்கியத்துவம் புலனாகின்றது. இவ்வாறு படைக்கப்பட்ட மனிதனுக்கு மற்றைய உயிரினங்களைவிட பகுத்தறியும் தன்மையை ஆற்றலை அளித்துள்ளான் இறைவன் ஆகவே இவ்வறிவும் ஆற்றலும் மனிதனுக்கு எவ்வளவு முக்கியம் என்பது தெளிவாகின்றது.

இவ்வறிவை எவ்வாறு மனிதன் பெற்றுக்கொள்ளுகின்றான் என்றால், பார்ப்பதன்மூலம் கேட்பதன்மூலம், வாசிப்பதன்மூலம், அனுபவத்தின்மூலம் (பட்டறிவின்மூலம்) எனலாம். அறிவானது ஒருமனிதனது மனதை கட்டுப்படுத்துகின்ற உயர்சாதனமாக விளங்குகின்றது. ஆகவேதான் அறிவுக்கும் மனத்திற்கும் மிகவும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. அறிவு இருந்தால்தான் மனத்தால் ஆட்சி செய்யப்படுகின்ற புலன்களால் (கண், காது, மூக்கு, நாக்கு, மெய்) ஏற்படுகின்ற உணர்வுகளை கட்டுப்படுத்த முடியும். அப்படியில்லை என்றால் மனமானது கட்டுப்பாட்டை இழந்து போகின்றதை கவிஞர் கண்ணதாசன் மிக அழகாக கூறுகின்றார்.

*"மனம் ஒரு குரங்கு, அதை தாவவிட்டால், தப்பிஓட*
*விட்டால் அது பாவத்தில் தள்ளிவிடும்"*

ஒருவன் பெற்ற அறிவுக்கு மனமானது கட்டுப்படுகின்றபோது அது அளவற்ற ஆற்றலைப் பெறுகின்றது. இந்த ஆற்றலின் வளர்ச்சியைப் பொறுத்து எண்ணஅலைகள் விரிவடைந்து வலிமைபெறுகின்றது. இதனால்,மனிதரை, விலங்குகளை, ஊரை, நாட்டை, உலகத்தையே இயக்கமுடியும். இந்த அளவற்ற ஆற்றல்களுக்கெல்லாம் கட்டுப்பாட்டு மையமாக மூளை அமைந்திருக்கின்றது.

கருவிலே உடலுடன் உயிர் இணைந்து இயக்கம் பெறத்தொடங்கியதில் இருந்து அனைத்து ஆற்றல்களும் வெளிப்படத்தொடங்கிவிடுகின்றன. ஆற்றல்களுக்கெல்லாம் கட்டுப்பாட்டு மையமாக இருக்கின்ற மூளையை இயக்குவது மனமாகும். மனத்தை (புலன்களை- கண், காது, மூக்கு, நாக்கு, மெய்) இயங்கச்செய்வது அறிவாகும். மனமானது ***"அலைபாயுதே என்மனம் அலைபாயுதே"*** என்ற நிகழ்வில் சிக்கித்தவிக்கின்றது என்றால் அதைப் பக்குவப்படுத்த அல்லது வயப்படுத்த தவறிவிட்டோம் என்பதே பொருளாகும். ஆகவேதான் அதை நமது அறிவின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும் என்று கூறுகின்றார் பொய்யாமொழிப்புலவர் வள்ளுவர்.

*"சென்ற விடத்தான் செலவிடா தீதொரீஇ*
*நன்றின்பால் உய்ப்பது அறிவு"*

**மனத்தின்** ஆற்றலையும் அதை ஒருமுகப்படுத்தும் முறையையும் உணர்ந்து அதன்மூலம் செயற்கரிய சாதனைகளை **புரிந்தவர்களை இன்று** உலகில் காணலாம். அதாவது கொடியவிலங்குகளை வயப்படுத்தகூடிய 'மெஸ்மரிச'வாதிகளையும், **நினைத்தவர்களை** ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு வரவழைக்கும் 'ஹிப்னாட்டிச' ஆற்றலுடையவர்களும் இருக்கின்றார்கள். புலன்களை (அடக்கி) வென்று தவவலிமை பெற்ற பெருமுனிவர்களை நமது வரலாறுகளில் காண்கின்றோம். உலகம்போற்றும் உத்தமர் **இயேசுபிரான்** நாற்பது நாட்கள் ஊண் உறக்கமின்றி நோன்பிருந்ததாகவும் (புலன்களை அடக்கி மனவலிமையையும், ஆற்றலையும் பெற்றதினால் சாவை வென்றார் என்றும்), புத்தபிரான் போதிமரத்தின் கீழ் புலன்களை அடக்கி ஞானம்பெற்றார் என்றும் வரலாறுகள் சான்று பகர்கின்றன.

புலனடக்கம் பற்றி வள்ளுவர் இரண்டடியில்...

*"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கலாற்றலின்*
*எழுமையும் ஏமாப்புடைத்து"*

என்று கூறுவதில் இருந்து, மனஆற்றலின் சிறப்பும், பயனும்



படிப்பகம்

www.padippakam.com



தெளிவாகின்றது. விஞ்ஞானரீதியாகவும் நாம் இதை நோக்குகையில் பரவிக்கிடக்கும் சூரியகதிர்களை குவிவில்லையில் ஒன்றாக்கி நெருப்பு உண்டாக்குவதுபோல், சிதறிக்கிடக்கும் ஐம்புல உணர்வுகளை ஒருமைப்படுத்துகின்ற போது அளப்பரிய மனோசக்தி கிடைக்கின்றது. இன்றைய விஞ்ஞான உலகில் கணனியே (Computer) பெரும்பகுதி வேலையை கணிக்கின்றது என்று சொன்னால் அதன்ஆற்றலும், சக்தியும்தான் என்றால் மிகையாகாது. அந்த கணனிக்கு உரியசக்தியையும், ஆற்றலையும்விட பெருமளவு சக்தியும் ஆற்றலையும் கொண்டது மனம் என்றால் அதை ஏற்றுக்கொள்ள பலர் பின்நிற்பர். உயிரினங்களை எடுத்துக் கொண்டால், உலகில் நடைபெறுகின்ற ஒவ்வொரு இயற்கைவிளைவுகளையும் முன்கூட்டியே தமது உணர்வுகளால் (புலன்களால்) அறிந்துகொண்டு தற்காப்பு நடவடிக்கையில் இடம்பெயர்ந்து விடுகின்றன. இவைகளைவிட சக்திவாய்ந்த மனிதன் சிறப்பான ஆற்றல்களைப் பெற்றிருக்கின்றான் என்றால், அதாவது ஒளியின் வேகத்தைவிட பலமடங்கு வேகமாக சிந்திக்கும் மனிதன், கணனிப்பொறியை விட வேகமான மனஆற்றலில் நினைவில் கணித்திடும் மனிதன் சக்திவாய்ந்தவன்.

ஆகவே மனிதன் ஒவ்வொருவனும் தனது அறிவை வளர்த்துக்கொள்ளவேண்டும். அந்த அறிவின்மூலம் மனத்தை (புலன்களை) கட்டுப்படுத்தவேண்டும். அப்படிக்கட்டுப்படுத்துகின்றபோது மனிதமனம் அளவற்ற ஆற்றலைப்பெறுகின்றது. இந்த ஆற்றல்களை செயற்படுத்த மூளையானது கட்டளைகளைப் பிறப்பிக்கின்றது. ஆகவே அறிவுக்கும் - மனத்திற்கும் - மூளைக்கும் நெருங்கியதொடர்பு இருக்கின்றதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

◆◆◆◆◆

# பீர்பாலின் சிரிப்புக் கதைகளிலிருந்து....

## கொடுப்பவர் கையும் வாங்குபவர் கையும்

- எஸ். ஜிவரஞ்சினி

**எங்க எல்லா பாப்பாக்களுக்கும் தென்னலிராமன் கதை தெரியும் ஆனா உங்களுக்கு பீர்பால் கதைகள் தெரியாது. தெரியாதென்றெ வைத்துக்கொள்வோமே!**

**பீர்பால் அக்பரின் ஆட்சியில் பெயரும், புகழுடனும் வாழ்ந்த மாமேதை. இவரது சொந்தப்பெயர் மகேஷ்தாஸ். ஆரம்பகாலத்தில் அக்பரின் அவையிலே விகடகவியாக, வாழ்த்து, தனது வேடிக்கை வினோதங்களினால் மக்களை மகிழ்வித்து பின்னாளில் அக்பரின் மதிப்பையும், மரியாதையும் பெற்று உயிர் அரசபதவி அடைந்தார்.**

**'பொதுவாக, ஒருவன் தானம் கொடுக்கின்றான் என்றால் அவன் கை உயர்ந்திருக்கும். தானம் வாங்குபவன் கையோ தாழ்ந்திருக்கும். இதற்கும் நேர்மாறாக தானம் கொடுப்பவன் கை தாழ்ந்தும், தானம் வாங்குபவன் கை உயர்ந்தும் இருக்கும். ஒருநிலை எந்தச் சந்தர்ப்பத்தில் ஏற்படக்கூடும். இது குறித்து யாராவது தெளிவான விளக்கம் தர முடியுமா?' இவ்வாறு ஒரு நாள் அக்பர், தமது அவையில் இருந்த அமைச்சர்களையும், அறிஞர்களையும் நோக்கிக் கேட்டார்.**

**இந்தக் கேள்விக்கு எளிதாக விடை காண முடியாமல் சபையினர் திண்டாடினர். அந்தச் சமயம் பீர்பால் சபையில் இல்லை. பீர்பாலினாலும் இந்த வினாவுக்கு விடையளிக்க முடியாது என்று சபையினர் நினைத்தனர். அந்தச் சமயத்தில் சபைக்குள் பீர்பால் நுழைந்தார். மற்றவர்களிடம் கேட்ட அதே வினாவை அக்பர் பீர்பாலிடம் எழுப்பினார்.**

**பீர்பால் சற்றும் தயங்காமல், 'மன்னர் அவர்களே! தாங்கள் கூறும் நிலை மூக்குப்பொடி விவகாரத்தில் (வெத்திலை, பாக்கு) அமையும். மூக்குப்பொடியை ஒருவர் மற்றவரிடம் விரும்பிக் கேட்கின்றார் என வைத்துக் கொள்வோம். அப்போது மூக்குப்பொடி தானம் அளிப்பவர் தமது மூக்குப்பொடி டப்பியைத் திறந்து நீட்டுவார். மூக்குப்பொடியைப் பெறுபவர் வழங்குபவர் கையைவிடச் சற்று உயர்த்திப் பொடியை எடுப்பார். அந்த நிலையில் கொடுப்பவர் கை கீழாகவும் எடுப்பவர் கை மேலாகவும் இருக்கும்' என்று கூறினார்.**

**ஆமாம்! இந்த அற்ப விஷயம் நமக்கு நினைவுக்கு வராமல் போய்விட்டதே! என்று சபையினர் முணுமுணுத்தனர்.**

**மிகவும் அற்புதமாகப் பதிலளித்து விட்டீர்! என அக்பர் பீர்பாலைப் பாராட்டினார்.**

▣▣▣▣▣



படிப்பகம்

NEW LUCKY VIDEO
நியூ லக்கி வீடியோ

ASCES இன் சேவை
பல்லாண்டுகள்
சிறப்புடன் தொடர
எமது வாழ்த்துக்கள்!

New Lucky Video
28 rue Labat
75018 Paris
Tél : 01 42 51 29 19
M° : Marcadet Poissonniers

அபிராமி ஸ்டோர்

புதிய, பழைய திரைப்படப் பாடல்களை
ஓடியோவிலும், சிடியிலும்
பெற்றுக்கொள்ளவும்...
புதிய, பழைய திரைப்படங்களை வீடியோவில்
பெற்றுக்கொள்ளவும்...
அனைத்து விதமான ஆசிய, ஐரோப்பிய,
ஆபிரிக்க மளிகைப் பொருட்களுக்கும்
நாடுங்கள்

அபிராமி ஸ்டோர்
25 Bd de la Chapelle
75010 Paris
Tél : 01 42 09 28 55
Fax : 01 42 09 28 73
M° : La Chapelle ou Stalingrad

பல்லாயிரக்கணக்கான வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப்
பெற்ற மிகப்பிரம்மாண்டமான ஸ்தாபனம்

லா சப்பலில்

KOPAL & Co
Super Marché

அனைத்து மளிகைப்
பொருட்களிற்கும்
மக்கள் மனங்கவர்ந்த
ஸ்தாபனம்

64 Louis Blanc
75010 Paris
